Nutritious Meals Scheme

74. *Q*.—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Nutritious Meals be pleased to state—

(*a*) whether it is a fact that some outsiders entered into the Elementary School in Mavilangai village, in South Arcot district and demanded that the teacher should show to them the accounts relating to the Free Nutritious Noon Meals Scheme;

(*b*) whether the teacher was assaulted for not showing the accounts; and

(*c*) if so, whether the Government will come forward to safeguard the teachers from interference by unauthorised persons?

மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் : (அ) கீழ்மாவிலங்கை கிராம ஆரம்பப் பள்ளியில் சத்துணவுத் திட்ட வரவு, செலவு கணக்கைக் காட்டுமாறு யாரும் வற்புறுத்தவில்லை.

(இ) கணக்கு காட்ட மறுத்தார் என்ற காரணத்திற்காக ஆசிரியர் தாக்கப்படவில்லை. மாறாக ஆசிரியர் திரு. ஏ. பெருமாள் என்பவர் மீது வீணான வதந்தி கிளப்பி, அவரை வம்புக்கு இழுத்து 28—3—1982 அன்று இரவு 9-00 மணிக்கு தட்சிணாமூர்த்தி மற்றும் பெருமாள் கவுண்டர் என்ற இரு நபர்கள் கத்தியால் குத்திவிட்டனர்.

(உ) சத்துணவுத் திட்டத்தின் பொறுப்புகளிலிருந்து ஆசிரியர்கள் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டு விட்டனர். எனவே இந்தக் கேள்வி எழுவதில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இப்போது சத்துணவுக் கணக்கு எந்தவகையில் பாதுகாக்கப்படுகிறது, மேற்பார்வை செய்யப்படுகிறது?

1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இது கீழ்மா விலங்கையில் நடைபெற்ற பிரச்சினை பற்றிய வினாவாகும். தனிக் கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிக்கையிலே. சத்துணவுத் திட்ட மையங்களைக் கண்காணிக்கச் சென்று, நடவடிக்கை எடுத்ததாக அறிகிறோம். சத்துணவுக் கூடங்களைத் தொடர்ந்து கண் காணிக்க அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கொண்ட கண் காணிப்புக் குழுக்களை ஒவ்வொரு மையத்திற்கும் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் : இப்போதே கண்காணிப்புக் குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் முறையாகச் செயல்பட சில சட்டச் சிக்கல்கள் இருப்பதால், அதை முறைப்படுத்த அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுதல் பற்றி

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே. பெங்களூர் சம்பவம் குறித்து நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய அறையிலேயே சொன்னேன். அது பரிசீலனையில் இருக்கிறது.